நாள்: 03.09.2025
O.S. No. 42 / 2021
பெயர்: ஹாஜாநிஜாமுதீன், த/பெ. அப்துல் ஹமீர்
பி.வா.சா.1

**<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை</u> :-**

முதல் விசாரணை சத்தியபிரமாண வாக்குமூலத்தில் அப்துல்பாரியின் முகவர் என்ற முறையில் அந்த வாக்குமூலத்தில் சாட்சியமாக அளிப்பதால் அதில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். நான் பிறந்தது முதல் தற்போது வரை நாகப்பட்டினம் மாவட்டத்தில் வசித்து வருகிறேன் என்றால் சரிதான். அப்துல்பாரி எனது மைத்துனர் ஆவார். அப்துல்பாரியின் குடும்ப உறுப்பினர் விபரங்கள் எனக்கு நன்கு தெரியுமா என்றால் தெரியும். அப்துல் பாரியின் பாட்டி பெயர் என்னவென்றால் எனக்கு தெரியாது. அப்துல்பாரியின் தாத்தா பெயர் தெரியுமா என்றால் தெரியாது. அப்துல்பாரியின் தாத்தாவிற்கு எத்தனை மனைவி என்று தெரியுமா என்றால் இரண்டு மனைவிகள். அப்துல்பாரியின் தாத்தாவின் முதல் மனைவியின் பெயரும் அவர் மூலம் உள்ள வாரிசுகள் பெயர் தெரியுமா என்றால் தெரியாது. அப்துல்பாரியின் பாட்டிக்கு எத்தனை வாரிசுகள் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். வாதி யாருடைய மகள் என்றால் தெரியாது. எனது சகோதரியை அப்துல்பாரிக்கு 1994-ம் ஆண்டு திருமணம் செய்து கொடுத்தேன். அத்திருமணத்தின் போது அப்துல்பாரி எங்கு குடியிருந்தார் என்றால் மாப்பிள்ளைக்குப்பத்தில் குடியிருந்தார். எனது சகோதரியை அப்துல்பாரி திருமணம் செய்த போது எழுதிக்கொடுத்த நிஹ்க்கா நாமா தாக்கல் செய்ய இயலுமா என்றால் இயலும். திருமணத்தின்போது வேறு இடத்தில் அப்துல்பாரி குடியிருந்தார் என்றாலும் அவர் எனது மச்சான் என்பதால் மாப்பிள்ளைக்குப்பத்தில் குடியிருந்தார் என்று பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. 1994-ம் ஆண்டுக்கு முன்னர் அப்துல்பாரியும் அவரது குடும்பத்தாரும் எங்கு வசித்தார் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். தாவா சொத்திற்கு நான் சென்றுள்ளேனா என்றால் சென்றுள்ளேன். தாவா வீட்டின் கதவு எண் தெரியுமா என்றால் தெரியாது. தாவா வீட்டின் வாசல் எந்த திசை நோக்கி உள்ளது என்றால் தெற்கு திசை நோக்கி உள்ளது. தாவா சொத்திற்கு வடக்கில் என்ன உள்ளது என்றால் வீடு உள்ளது. கிழக்கில் என்ன உள்ளது என்றால் சாலை உள்ளது. தாவா சொத்துக்கு தொடர்பாக இவ்வழக்கிற்கு முன்பு பாகப்பிரிவினை வழக்கு யாரால் யார் மீது தாக்கல்

செய்யப்பட்டுள்ளது என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. அந்த பாகப்பிரிவினை யார் யாருக்கு எந்த பாகம் ஒதுக்கப்பட்டது என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. எனது மைத்துனர் என்னிடம் அந்த பாகப்பிரிவினை வழக்கில் எவ்வளவு சொத்து ஒதுக்கப்பட்டது என்ற விபரம் என்னிடம் கூறியதில்லை என்றால் சரிதான். ஹாஜிராம்மாள் மகள் தான் இவ்வழக்கின் வாதி என்றால் சரிதான். ஹாஜிராம்மாள் முகம்மது சுல்தான் என்பருடன் திருமணம் நடைபெற்ற விபரம் தெரியுமா என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. ஹாஜிராம்மாள் திருமணம் ஆகி ஒரே வருடத்தில் குழந்தையுடன் விவாகரத்து பெற்று வந்து அவரது தாயாருடன் தாவா சொத்தில் வசித்தார் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. அப்துல்பாரி தற்போது எங்கு குடியிருந்து வருகிறார் என்றால் தாவா சொத்திலிருந்து 200 மீட்டர் தள்ளி வசித்து வருகிறார். தாவா சொத்திற்கு கடைசியாக நான் எப்போது சென்றேன் என்றால் 2010-ம் ஆண்டு சென்றேன். அப்போது அந்த வீட்டில் எத்தனை அறைகள் இருந்தது என்றால் மூன்று அறைகள் இருந்தது. சமையலறை எங்கு இருந்தது என்றால் சமயலறை கடைசியாக இருக்கும். அந்த மூன்று அறைகளில் பெரிய அறையில் அப்துல்பாரியும், அதற்கு அடுத்த அறையில் வாதியும் வசித்தார். வாதியின் தாயார் எப்போது இறந்தார் என்றால் 1998-ம் ஆண்டு இறந்தார். அதற்கு முன்பு 1996, 1997 ம் ஆண்டுகளில் வாதியின் தாயாரை வழக்கு சொத்தில் பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். முகம்மது பாரி குடியிருக்கும் வீடு சொந்த வீடா என்றால் சொந்த வீடு எந்த வருடம் அந்த வீட்டிற்கான மனையை வாங்கினார் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. முகம்மது பாரி குடியிருந்து வரும் வீடு உள்ள இடம் பூர்வீக இடம் ஆகும், அதில் தான் அவர் கடந்த 7, 8 வருடங்களாக வசித்து வருகிறார். வாதி வழக்கு சொத்தில் குடியிருக்கிறாரா என்றால் இல்லை. எதை வைத்து அவர் அங்கு வசித்து வரவில்லை என்று கூறுகிறேன் என்றால் 2010-ம் வருடம் நான் வீட்டிற்கு சென்றபோது அவர் வழக்கு சொத்தில் இல்லை என்பதால் அவர் அங்கு வசிக்கவில்லை என்று கூறுகிறேன். வாதி இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை பார்த்துள்ளேனா என்றால் இல்லை. வாதி மாப்பிள்ளைக்குப்பம் ஜமாத்தில் சந்தா தொகை செலுத்தியுள்ளாரா என்றால் செலுத்தியிருக்கலாம். இஸ்லாமியர் ஒருவர் எந்த பகுதியில் வசிக்கிறாரோ அந்த பகுதியில் உள்ள ஜமாத்தில்

தான் சந்தா செலுத்துவார் என்றால் சரிதான். 2014 லிருந்து 2021 வரை வாதி மாப்பிள்ளைக்குப்பம் ஜமாத்தில் சந்தா செலுத்தியுள்ளார் என்றால் சரிதான். வாதி தான் தாவா சொத்தில் 1948 முதல் குடியிருந்து வருகிறார் என்றாலும் அதை மறைத்து நான் பொய் சாட்சியமளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. இவ்வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது என்றாலும், எனது மைத்துனர் குடும்பம் தொடர்பான விபரங்கள் எனக்கு எதுவும் தெரியாது என்றாலும் அவர் எனது மைத்துனர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்த பிறகு பிரதிவாதி தாவா சொத்திற்குள் நுழைந்து அதிலிருந்த மின் அட்டைகளை எடுத்து வந்தார் என்றால் சரியல்ல. வாதி குடியிருக்கும் வீட்டில் பிரதிவாதி 28.07.2021-ம் தேதி வீட்டை காலி செய்ய சொல்லி மிரட்டி வீட்டில் கற்களை விட்டு எறிந்தார் என்றாலும், அது தொடர்பாக காவல் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டது என்றாலும் அதைப்பற்றி எனக்கு தெரியாது. அவ்வாறு அளிக்கப்பட்ட புகாரின் அடிப்படையில் போலிசார் முகம்மதுபாரியை எச்சரித்தார்கள் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. 2010-ம் ஆண்டு முதல் 2025-ம் ஆண்டு வரை வாதிக்கும், பிரதிவாதிக்கும் இடையே என்ன பிரச்சனை நடந்தது என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். வாதி என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் பொய் சாட்சியமளிக்கிறேன் என்றாலும், எனக்கு வழக்கு விபரங்கள் எதுவும் தெரியாது என்றாலும், எனது சாட்சியம் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றாலும், தாவா சொத்தில் வாதி தான் வசித்து வருகிறார் என்றாலும் சரியல்ல.

M S
BHARATHIDHASAN

Digitally signed by M S BHARATHIDHASAN
DN: cn=M S BHARATHIDHASAN, ou=TIRUVARUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamilnadu, c=IN
Date: 2025.09.10 09:13:08 +0530